ISSN 1391-9504

Vijey விஜய

# விஜய்

18.05.2016 - மலர் 13, இதழ் 12




மாணவர்களுக்கான அறிவசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படத்திற்குப் பொருத்தமான வாக்கியத்தின்கீழ் கீறிடுக.

1.


★ குவளையில் பால் உள்ளது.
★ போத்தலில் பழச்சாறு உள்ளது.
★ பெக்கட்டில் பழச்சாறு உள்ளது.

2.



★ தலையணைமீது பேனா
★ கட்டிலின் கீழ் பேனா
★ பேனாவுக்கு மேல் தலையணை

3.


★ அக்கா தொலைக்காட்சி பார்க்கின்றாள்
★ சிறுவர்கள் விளையாடுகின்றனர்
★ கட்டிலில் ஒருவர் அமர்ந்திருக்கின்றார்

4.


★ கமல் விளையாடுகின்றான்
★ கமல் மீன் பிடிக்கின்றான்
★ கமல் படிக்கின்றான்



### இடைவெளிகளை நிரப்புக.

1. மேசையின் கீழ் ..................... உள்ளது.
2. ..................... பின்னால் நாய் மறைந்துள்ளது.
3. ..................... மேலே உள்ள கோப்பையில் பால்க்கட்டி உள்ளது.
4. மேசையின் மேலே ..................... ஒன்றும் உள்ளது.
5. எலியைப் பிடிக்க மேசையின் கீழ் ..................... பதுங்கியிருக்கின்றது.

### ஒவ்வொரு உயிரினத்திற்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து உரிய கட்டத்தில் எழுதுக.



| | | |
|---|---|---|
| கூட்டுப்புழு | தேனீ | நத்தை |
| வண்ணத்துப்பூச்சி | சிலந்தி | செவ்வண்டு |
| வெட்டுக்கிளி | ஈ | கறையான் |
| தும்பி | வண்டு | |



1. எல்லா தொப்பிகளிலும் காணக்கூடிய ஓர் அம்சத்தைக் குறிப்பிடுக.

..............................................................................



2. அளவில் பெரிய தொப்பியின் நிறம் யாது?

..............................................................................

3. பூக்களையும் இலைகளையும் கொண்ட தொப்பியின் நிறம் யாது?

..............................................................................

- ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்கும் உணர்வு வேண்டாமே...




**மனித சமூகம், பலதரப்பட்டோரை உள்ளடக்கியுள்ளது. இங்கு நல்லவர்களும் தீயவர்களும் கலந்தே உள்ளனர். எனினும், நல்லவர்களையும் தீயவர்களையும் இனங்கண்டு பழக வேண்டியது எம்மைச் சார்ந்த விடயமாக உள்ளது.**

வீட்டில், பாடசாலையில், வகுப்பறையில், பொது இடங்களில் என நாம் பலதரப்பட்ட மனிதர்களை சந்திக்க வேண்டி ஏற்படலாம். அவர்களில் யார் எந்தக் குணத்தைக் கொண்டவர்கள் என்பது எமக்குத் தெரியாது. ஆகவே, பொதுவாக ஒவ்வொருவரும் மற்றவர்களை சந்தேகத்துடன் அணுகும் நிலையே இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றது.

## குற்றச்செயல்களுக்கான பின்னணி

இன்றைய காலத்தில் மனிதர்கள் மத்தியில் பொறுமையற்ற தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையற்ற நிலை, கடுங்கோபம், சந்தேகம்



போன்ற பண்புகளே மேலோங்கியிருப்பதைக் காணலாம். இவ்வாறான பண்புகள் காரணமாக, பிறரிடமிருந்து அறிந்தோ, அறியாமலோ தவறொன்று நேர்ந்தால்கூட, அது பாதிக்கப்பட்டவரிடையே பழிவாங்கும் உணர்வை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

இன்று நம் நாட்டில் இடம்பெறும் பயங்கரமான குற்றச்செயல்களைப் பற்றியும் அவற்றுக்கான பின்னணி பற்றியும் ஆராய்ந்தோமானால், அவற்றில் பெரும்பாலானவை பழிவாங்கும் நோக்கில் இடம்பெற்றவையாகும் என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமை, எதையும் விரைவில் அடைந்துவிட வேண்டும் என்ற அவசரப் புத்தி, பொறுமையற்ற தன்மை, முன்கோபம் போன்ற பண்புகளினால் மனதில் தோன்றும் பழிவாங்கும் உணர்வே, இந்த குற்றச்செயல்களுக்கு பெரும்பாலும் காரணமாக உள்ளன என்பது தெரியவந்துள்ளது. இந்த பழிவாங்கும் உணர்வுத் தூண்டலால் கண்மூடித்தனமாக செயற்படும் சிலர், அதனால் விபரீதமொன்று நேர்ந்த பின்னரே, தமது தீய எண்ணங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறுகின்றனர்.


விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## உங்களுக்கு பிறர் செய்யும் தீயசெயலை பொருட்படுத்தாதீர்

பிறரால் எமக்கு இழைக்கப்படும் தீய செயல்களை எண்ணி வருந்துவதும் அதற்காகப் பழிவாங்க முனைவதும் கோபப்படுவதும் நன்றன்று. ஒருவர் நமக்கு இழைத்த தவறு பற்றிய





பழிவாங்கும் உணர்வு விபரீதமாகவே அமையும்



பொறுமை, நல்லெண்ணத்துடன் இருந்தால் பழிவாங்கும் உணர்வை தவிர்த்துக்கொள்ளலாம்

எண்ணங்கள் மனதில் தோன்றினால், அவை பற்றி மனதைக் குழப்பிக்கொள்ளாமல், மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு நல்ல செயல்களில் ஆர்வம் காட்டுங்கள். பொறுமையைக் கடைப்பிடித்து வாழப் பழகிக்கொள்ளுங்கள். மனதில் தீய எண்ணங்களை வைத்துக் கொண்டிருந்தால், வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியாது என்பதனை நினைவில்கொள்ளுங்கள். தீய சிந்தனைகளை மனதிலிருந்து தூக்கியெறிந்து, நல்லவற்றை மட்டுமே அணுகுங்கள். நல்லவை எப்போதும் உங்கள் வாழ்க்கையை மேம்படுத்தும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறருக்கு தீமை எண்ணாதே!

ஒரு காட்டில் பல விலங்குகள் மத்தியில் தீய எண்ணம் கொண்ட தேள் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் காட்டின் மத்தியில் சிறிய ஆறு ஒன்று இருந்தது. ஒருநாள் அந்தக் கொடிய தேளுக்கு ஆற்றினைக் கடக்கவேண்டிய கட்டாயம் வந்தது. ஆனால், தேளோ ஆற்றைக் கடக்க முடியாது தவித்தது. அப்போது ஆற்றின் அருகில் இருந்த விலங்குகளிடம் உதவி கேட்டபோது, தேளின் தீய குணத்தை எண்ணி எந்த விலங்கும் உதவ முன்வரவில்லை.

அந்த நேரத்தில் அங்கு வந்த ஆமையைக் கண்ட தேள் "ஆமையாரே, எனக்கு ஆற்றினைக் கடக்க உதவி புரிய வேண்டும்" என்று கேட்டது. "சரி! நானும் ஆற்றினைக் கடக்கத்தான்



வந்தேன். என் முதுகில் ஏறிக்கொள்ளுங்கள் உங்களை நான் அக்கரையில் விட்டு விடுகின்றேன்" என்றது ஆமை. "நன்றி ஆமையாரே" என்று ஆமையின் முதுகில் தேள் ஏறிக்கொண்டது. அதன் பின்னர் ஆமை நீரில் நீந்திச் செல்ல ஆம்பித்தது.

சிறிது நேரத்தில் தேளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. நான் எனது கொடுக்குகளால் பலரைக் கொட்டியபோது, அவர்கள் வலியால் துடித்ததைக் கண்டு இன்புற்றேன். ஆனால், ஒரு நாளும் இந்த ஆமைகளில் ஒன்றுக்காவது நான் கொட்டியதில்லையே? இன்று நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்று அதனை செய்து பார்ப்போமே என்று எண்ணியவாறு தேள் ஆமையின் முதுகில் கொட்டியது. ஆனால், ஆமை எவ்வித சலனமுமில்லாமல் நீந்திக்கொண்டிருந்தது. இதனைப் பார்த்த தேளுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

தீய எண்ணம் கொண்ட தேள் ஆமையைப் பார்த்து! "உங்களை அந்தக் கடவுள் எவ்வளவு அழகாக பாதுகாத்துள்ளார். உங்களின் இந்த முதுகுப் பகுதி மிகவும் கடினமாக இருப்பதால் உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது தானே" என்று கேட்டது. தேளின் தீய எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத ஆமை "ஆம் நண்பனே! எனது முதுகுப் பகுதி இறுக்கம் தான் அப்பகுதியில் எந்த ஆபத்தும் நேராது ஆனால், கழுத்துப் பகுதி மிகவும் மென்மையானது என்பதால் அந்தப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டால் என்னால் தாங்க முடியாது" என்றது ஆமை.

'ஓ அப்படியா!' என்று கேட்டுக்கொண்டே தேள் ஆமையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்று கொட்ட ஆரம்பித்தது. ஏதோ, குத்தியதால் விடுக்கென்று தலையை உள்ளே இழுத்துக்கொண்டது ஆமை. இதனால், தேள் ஆற்றில் விழுந்து உயிரை விட்டது. ஆமை மெதுவாக நீந்தி அக்கரையை அடைந்தது.

# பிரம்படி வைத்தியம்



சோழ நாட்டில் கரிகாலன் என்பவர் புகழ்பெற்ற வைத்தியராக இருந்தார். சோழ மன்னனின் நெருங்கிய நண்பரான இவர், சோழ நாட்டில் பலருக்கும் பணம் வாங்காமல் வைத்தியம் பார்த்துவந்தார். இதனால் மக்கள் மத்தியில் நல்லபிப்பிராயம் கரிகாலனுக்கு இருந்தது. பழைய ஓலைச்சுவடிகளில் உள்ள மருத்துவக் குறிப்புக்களை ஆராய்ச்சிக் கூடத்தில் பரீட்சித்துப் பார்ப்பார்.அவ்வாறு ஒரு நாள் ஆராய்ச்சி செய்த மருந்து ஒன்றினை அருந்திவிட்டார் கரிகாலன்.

சிறிது நேரத்தில் தனது உடல் கண்ணாடியாக மாறிவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டார். "ஆ...! என் உடல் முழுவதும் கண்ணாடியாகி விட்டதே!" என மன நோயில் வீழ்ந்தார் கரிகாலன். அதனால், எழுந்து நடந்தால் கண்ணாடி உடல் நொருங்கி விடுமோ, என்ற அச்சத்தில் வெளியில் செல்வதைத் தவிர்த்தார். தனது சீடர்களை மருத்துவம் பார்க்கும்படி கட்டளையிட்டார். இந்நிலையில் அரண்மனைக்கு வரும் கரிகாலன் சில நாட்களாக வரவில்லையே என அமைச்சரிடம் விசாரித்தார் மன்னன். "மன்னா! உங்கள் நண்பனான கரிகாலன் அவர்களுக்கு கண்ணாடி நோய் பீடித்திருப்பதாக அச்சத்தில் பயந்து அலறுகிறார்" என்றார் அமைச்சர். "அப்படியா விஷயம்? உடனே சேர நாட்டு மன்னனான புகழேந்தியின் நாட்டிலுள்ள சிறந்த மருத்துவரை அனுப்பச் சொல்லி தூது அனுப்புங்கள்"என்றார் மன்னன். சோழ மன்னனின் ஓலையைப் படித்த புகழேந்தியின் நண்பனான வீரமாமுனியை அழைத்து "சோழ மன்னனின் செய்தி கூறினார். "உங்களால் அந்த கண்ணாடி நோயை குணப்படுத்த முடியுமென எனக்கு நம்பிக்கை உண்டு சென்று வாருங்கள்" என்றார் புகழேந்தி. மன்னனின் கட்டளையை ஏற்ற வீரமாமுனியும் சோழ நாட்டுக்கு வந்து கரிகாலனின் வீட்டுக்குச் சென்று அறிமுகப்படுத்திக்கொண்டார் வீரமாமுனி. "வாருங்கள் தோழரே! எனக்குக் கண்ணாடி நோயிருப்பதால் தங்களை எழுந்து வரவேற்க முடியவில்லை மன்னியுங்கள் நண்பரே!" என்றார் கரிகாலன். "பரவாயில்லை. நண்பரே! உங்கள் நோயைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். இதனை விரட்ட என்னிடம் நல்ல மருந்து உள்ளது தங்கள் கவலை கொள்ளவேண்டாம்" என்றார் வீரமாமுனி.

வீரமாமுனி பையிலிருந்து ஒரு கலவையை நீருடன் கலந்து கரிகாலனிடம் கொடுத்தார். "என்ன மருந்து இது சுவையே இல்லையே" என்றார் கரிகாலன். "கண்ணாடி நோய்க்காக நானே ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த மருந்து இது. இன்னும் மூன்றே நாளில் இந்நோய் குணமாகும்" என்றார் வீரமாமுனி.

மூன்றாவது நாள் கரிகாலனின் வீட்டுக்கு வந்த வீரமாமுனி பிரம்புடன் கரிகாலனை அணுகினார்.

இறுதியாக மருந்தைக் கொடுத்த வீரமாமுனி "நண்பரே... இன்றோடு உங்களை வாட்டும் இந்த கண்ணாடி நோய் தொலைந்தது இனி நீங்கள் தாராளமாக நடக்கலாம்" என்றார். ஆனால் கரிகாலனோ "என்னால் நடக்கவே முடியாது" என்றார்.

வீரமாமுனியோ விடுவதாக இல்லை கரிகாலனின் கையை வலுக்கட்டாயமாகப் பிடித்து எழுந்து நிற்க வைத்தார். "பார்த்தீர்களா? எழுந்து நின்றாலும் நீங்கள் உடையவில்லை எனது மருந்து வேலை செய்கிறது" என்றார் வீரமாமுனி.

அப்போது தன் கையிலிருந்த பிரம்பால் கரிகாலனின் உடலின் விளாச ஆரம்பித்தார் வீரமாமுனி. "அடப்பாவி என்னை அடித்தே கொன்றுவிடுவாய் போலிருக்குதே" என அலறினார் கரிகாலன். பிரம்படியிலிருந்து தப்பிக்க வீட்டிற்குள்ளேயே ஓடினார். கீழே விழுந்து புரண்டார் பலமாகக் கூச்சலிட்டார்.

அப்போது வீரமாமுனி அடிப்பதை நிறுத்திவிட்டு "பார்த்தீர்களா கரிகால! இவ்வளவு அடி வாங்கியும் நீங்கள் உடையவில்லை என்பது இப்போதாவது புரிந்ததா?" என்று கேட்டார். சிறிது நேரம் யோசித்த கரிகாலன் தனது நோய் பற்றி வீரமாமுனியிடம் விசாரித்தார்.

"நண்பரே! நீங்கள் கற்பனையாக வரவழைத்துக் கொண்ட நோய் இது. உங்களைக் குணப்படுத்த நான் கொடுத்த மருந்து கூட வெறும் தண்ணீர்" என்றார் வீரமாமுனி.

"நல்ல வைத்தியம் செய்தீர்கள் போங்கள்! குணப்படுத் துவதாகச் சொல்லி என் உடலைப் பதம் பார்த்து விட்டீர்களே!" என்று புன்னகையுடன் சொன்னார் கரிகாலன்

"உங்களுக்கு வந்தது கண்ணாடி நோய்! அடித்தால் தானே சரியாகும்" என்று வீரமாமுனி நகைப்புடனேயே கூறி விடைபெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BE AWESOME

அங்கர் நியூடேல்

## பயிக் சாம்ப்ஸ்



இப்ராஹிம்
தெமட்டகொட

"இந்த சைக்கிளை எனக்கு மிகவும் பிடிக்கும். அங்கர் நியூடேல் எனது கனவை நினைவாக்கியது!"



ஹனுக
வெலிவேரிய

"இந்த சைக்கிள் மிகவும் அழகானது. அங்கர் நியூடேலுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்!!!"



லசந்த
தெஹியோவிட

"இந்த அற்புதமான அங்கர் நியூடேல் சைக்கிளுக்கு நன்றி!"

## பயிக் சாம்ப்ஸ்



தருஷி லக்ஷான
இப்பகமுவ

"இந்த சைக்கிள் எனது நீண்ட நாள் கனவுநன்றி அங்கர் நியூடேல்!"



பஸிந்து
கொழும்பு 15

"இது எனது முதல் சொந்த சைக்கிள். நன்றி அங்கர் நியூடேல்!!"

## டப் சாம்ப்



நிம்னா
ராஜகிரிய

"எனக்கான சொந்த டப் ஒன்று கிடைத்ததில் மகிழ்ச்சி!!"

# அடுத்த சாம்ப் யார்?

தொடர்ந்து எழுத்துகளை சேகரித்து அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மாணவர்களை பொறுத்தவரையில் சுற்றுலா செல்வது மிகவும் பயன்மிக்கதான ஒரு விடயமாகும். அவ்வாறான, சுற்றுலாக்களை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேற்கொள்வது சிறந்தது. அத்துடன், அவ்வாறான இடங்களை முன்பே அறிந்து கொண்டு செல்வதும் சுற்றுலாவை சுவாரஸ்யம் மிக்கதாக மாற்றும். அந்தவகையில் இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நுவரெலியா நகரினைப் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.

## கிரேகரி வாவி

நுவரெலிய நகரின் மத்தியில் அமைந்துள்ள கிரேகரி வாவியின் நிர்மாணப் பணிகள் 1873 ஆம் ஆண்டு ஆளுநராக இருந்த சேர் விலியம் கிரேகரியினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனை நினைவுகூரும் வகையில் அவரின் பெயர் இந்த வாவிக்கு சூட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கம் பிதுருதாலகலை மலைத்தொடர்ச்சியிலிருந்து உற்பத்தியாகும் தலகல நீர்வீழ்ச்சியினை குறுக்கிட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## விக்டோரியா பூங்கா

விக்டோரியா பூங்காவானது பலதரப்பட்ட பூக்கள், செடிகள், நீர்த்தடாகங்கள், புல் வெளிகள் ஆகியவற்றைக் கொண்ட அழகிய பூங்காவாகும். 1897 இல் விக்டோரியா ராணியின் அறுபதாவது விழாவினை யொட்டி அவரது பெயர் இப் பூங்காவிற்கு சூட்டப்பட்டுள்ளது.

## நுவரெலியா தபாலகம்

நுவரெலியா நகருக்கு அழகு சேர்க்கும் சிறப்பான வடிவத்தினைக் கொண்ட கட்டடமாக நுவரெலியா தபாலகத்தைக் குறிப்பிடலாம். இந்த கட்டடம் 1894ஆம் ஆண்டு பிரித்தானியர்களினால் **Tudor-style** என்ற கட்டட வடிவமைப்பினை பின்பற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



## பிதுருதலாகலை மலை

நுவரெலியா நகரில் அமைந்துள்ள மலைத்தொடர்ச்சியாக பிதுருதலாகலை மலையை கருத முடியும். இந்த மலையின் உச்சி கடல் மட்டத்திலிருந்து 2,524 மீற்றர் உயரமாக உள்ளது. இந்த மலையில் இலங்கைக்கே உரித்தான தாவரங்களையும், உயிரினங்களையும் பல வகையான அரிய வகை மரங்களையும் காணலாம்.

## ஹக்கல தாவரவியல் பூங்கா

நுவரெலியா நகரிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் வழியில் ஹக்கல பூங்கா அமைந்துள்ளது. 1861ஆம் ஆண்டு இந்த தாவரவியல் பூங்கா ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் சேவையாற்றிய புகழ்பெற்ற தாவரவியல் விஞ்ஞானியான ஜோர்ஜ் ஹென்றி கென்ட்ரிக் த்வேற்ஸினால் 'சின்கோனா' பயிர் பயிரிடப்பட இப்பூங்கா பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் தேயிலை பயிர்ச்செய்கையை பரீட்சித்துப் பார்க்கும் முகமாகவும் இப்பூங்கா பயன்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹக்கல இயற்கை சரணாலயம்

உயிரினங்களின் இருப்புக்காக ஒதுக்கப்பட்ட சரணாலயங்களில் 'ஹக்கல' சரணாலயம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இலங்கையின் ஈரவலயத்தில் அமைந்துள்ள இந்த சரணாலயத்தில் பல வகையான உயிரினங்களையும் காண முடியும்.

## கிரிகல்பொத்த மலை

இங்குள்ள கிரிகல்பொத்த மலை 2,395 மீற்றர் உயரம் கொண்டது. இலங்கையின் இரண்டாவது உயரம் கூடிய மலை இதுவாகும். இந்த மலையை சுற்றியுள்ள வனாந்தரங்களில் இலங்கை சிறுத்தைகள், மரைகள் என்பன பரவலாக வாழ்கின்றன. இந்த மலை உச்சியின் ஒரு பகுதியில் அமைந்துள்ள பெரிய கற்பாறை போன்ற அமைப்பின் காரணமாக, இந்த மலைக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டின் குட்டி இங்கிலாந்து!



கிரிகல்பொத்த என்ற பெயர் உருவாகியிருக்கலாம் என கருதப்படுகின்றது.

## தொட்டுப்பல மலை

தொட்டுப்பல மலை இலங்கையின் 237 மீற்றர் உயரம் கொண்ட மூன்றாவது உயரம் கூடிய மலையாகக் கருதப்படுகின்றது. இந்த மலையிலும் சிறுத்தைகள் மற்றும் மரைகளைக் காண முடியும்.

## கெல்வேஸ் லேன்ட் தேசிய வனாந்தரம்

கெல்வேஸ் லேன்ட் நுவரெலியா நகர எல்லைக்குள் அமைந்துள்ள தேசிய வனாந்தரமாகும். இது 2008ஆம் ஆண்டு தேசிய வனாந்தரமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 27 ஹெக்டெயர் அளவிலான சிறிய பரப்பில் இந்த வனம் பரவியுள்ளது. இங்கு அதிகளவிலான பறவைகளைக் காண முடியும்.

## குதிரைப் பந்தயத்திடல்

நுவரெலியா நகரில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக குதிரைப் பந்தயத் திடல் கருதப்படுகின்றது. இந்த குதிரைப் பந்தயத்திடல் உலகில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான இடத்தில் அமைந்துள்ள பந்தயத் திடல்களில் ஒன்றாக உள்ளது. 1,800 மீற்றர் நீளம் கொண்டதாக பந்தயப்பாதை காணப்படுகின்றது. ஜோன் பேக்கரினால் 1804இல் குதிரைப் பந்தயம் நுவரெலியா நகரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோதும் இந்த பந்தயத்திடல் 1875 இல் தான் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## இறம்பொட நீர் வீழ்ச்சி

109 மீற்றர் உயரம் கொண்ட இறம்பொட நீர்வீழ்ச்சி இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சிகளில் 11ஆவது இடத்தினைப் பெறுகின்றது. இறம்பொட பிரதேசத்தில் அழகிய சூழ்நிலையில் இந்த நீர்வீழ்ச்சியினை காண முடியும்.

## சென். கிளயர்ஸ் நீர்வீழ்ச்சி

தலவாக்கலை - ஹற்றன் பிரதான வீதியில் இருந்து சென். கிளயர்ஸ் நீர்வீழ்ச்சியினை காண முடியும். கொத்மலை ஓயாவிலிருந்து உருவாகும் இந்த நீர்வீழ்ச்சி இரு நீர்வீழ்ச்சிகளைக் கொண்டது. அதில் பிரதான நீர்வீழ்ச்சி 80 மீற்றர் நீளமும் 50 மீற்றர் அகலத்தையும் கொண்டது. இது இலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சிகளில் 20ஆவது உயரமான நீர் வீழ்ச்சியாகும்.

## லவர்ஸ் லீப் நீர்வீழ்ச்சி

நுவரெலியா நகரின் ஹாவா எலியப் பகுதிக்கு அருகாமையில் லவர்ஸ் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. இதன் நீளம் 30 மீற்றர் ஆகும்.

## பேக்கர்ஸ் நீர்வீழ்ச்சி

பேக்கர்ஸ் நீர்வீழ்ச்சியானது ஹோர்ட்டன் சமவெளியில் அமைந்துள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகும். ஆய்வாளரும், இயற்கையியல் விஞ்ஞானியுமான சேர் சமுவெல் பேக்கர்ஸ் அவர்களின் பெயர் இந்த நீர்வீழ்ச்சிக்கு சூட்டப்பட்டுள்ளது. 20 மீற்றர் உயரத்துடன் பெலிஹுல் ஓயவில் இந்த நீர்வீழ்ச்சி உருவாகியுள்ளது.

## ஹோர்ட்டன் சமவெளி தேசிய வனாந்தரம்

கடல் மட்டத்திலிருந்து 2,100 மீற்றர் தொடக்கம் 2,300 வரையான உயரம் கொண்ட இவ்வனாந்தரம் பிரதானமாக மலையக ஈரவலய தாழ்நிலத்தினையும் முகில்கள் ஊடறுத்துச் செல்லும் காடுகளையும் கொண்டது. மத்திய மலைநாட்டின் தென்பகுதி மேட்டுநிலத்தில் இந்த சமவெளி அமைந்துள்ளது. கிரிகல் பொத்த, தொட்டுப்பல போன்ற மலை உச்சிகள் இந்த வனாந்தரத்தில் அமைந்துள்ளன. இங்கு அடிக்கடி மாறும் காலநிலை காரணமாக, நீர்வளம் நிறைந்த பகுதியாக ஹோர்ட்டன் சமவெளி முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக மகாவலி, களனி மற்றும் வளவை போன்ற பிரதான ஆறுகளும் பெலிஹுல் ஒய ஆகியவற்றின் பிரதான நீர் வளப்பகுதியாகவும் ஹோர்ட்டன் சமவெளி உள்ளது.

பலதரப்பட்ட உயிரினங்கள் இங்கு வாழ்கின்றன. பல தாவர இனங்களையும் மூங்கில் போன்ற பலவகை மரங்களையும் இங்கு காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)





பெயர்: ................................................

கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.


★ 1, 2 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.

01.




1. A 2. D 3. B

02.




1. A 2. B 3. D

03. 7 8 6 3 இந்த இலக்கங்களால் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண் யாது?

1. 7638 2. 3678 3. 8763

04. அண்ணா கடைக்குச் சென்று ரூபா 100 ஐ கொடுத்து, 4 பென்சில்களும் 2 பேனாக்களும் வாங்கினார். பேனாவின் விலை ரூபா 20.00 ஆகும். பென்சிலின் விலை ரூபா 8.00 ஆகும் எனின், மீதியாக கிடைக்கும் பணம் யாது?

1. ரூபா 28.00 2. ரூபா 20.00 3. ரூபா 27.00


05. $\frac{4}{12}$ இற்குரிய சமவலுப் பின்னம் யாது?

1. $\frac{2}{6}$ 2. $\frac{1}{3}$ 3. $\frac{2}{4}$

06. நான்கு சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட வடிவம் எது?

1. சதுரம் 2. செவ்வகம் 3. முக்கோணம்

07.





'?' உள்ள இடங்களில் வர வேண்டிய எண்கள் யாவை?

1. 12, 23 2. 15, 12 3. 18, 23

08. 450ml நீரானது 3 சம பங்குகளாகப் பிரித்து ஒவ்வொரு கிண்ணத்திலும் ஊற்றப்பட்டது எனின், ஒரு கிண்ணத்தில் ஊற்றப்பட்ட நீரின் அளவு யாது?

1. 100ml 2. 125ml 3. 150ml

09.



இந்த உருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 6 3. 8

10. கீழ் உள்ள ரோமன் எண் குறிகளில் பிழையான எண் குறி எது?

1. XVI 2. VXI 3. XXI

11. ஒரு மணித்தியாலத்திலுள்ள செக்கன்களின் எண்ணிக்கை யாது?

1. 30 2. 60 3. 360

12. எழில் என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்தமான பறவைகள் யாவை?

1. கிளி, மயில் 2. கிளி, புறா 3. மயில், காகம்

13. இனிய, அழகான, உயரமான இவை யாவும்;

1. பெயர்ச்சொற்கள் 2. அடைமொழிகள்
3. வினைச்சொற்கள்

14. கண்கூடாக கண்டதற்கு சாட்சி வேண்டாம்.

1. கண்டால்தான் சாட்சி
2. கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டாம்
3. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

15. புத்திக்கூர்மை மிக்கவன் என்பதன் பொருள் யாது?

1. அறிவு மிக்கவர் 2. படிப்புக்கூடியவர்
3. ஆற்றல் மிக்கவர்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

(மே 11 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01) 1. இரவு/ இரவுவேளை 2. முத்துக்கள் 3. அண்மையில்
4. ஆழி/சாகரம்/கடல் 5. கற்பாறைகளுடன்
6. கற்பாறைகள் இருப்பதால்

02) 1. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.
2. கோபப்படுபவன் நிதானம் இழப்பான்.

03) 1. சிநேகிதி மட்டும் சென்றாள். 2. சிறுமி வீதி வழியே ஓடினாள்.

04) 1. நான் மீன் சாப்பிடுகிறேன் 2. நாம் பாடலொன்று பாடுவோம்
3. சந்தைக்குச் செல்வது யார்?

05) 1. 2 2. 1 3. 3 4. 4 5. 3
6. 4 7. 3 8. 3 9. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வானொலி ஒலிபரப்பில் அறிவிப்பாளரின் குறுக்கீடு...



வானொலிகளில் பாடல்களை ஒலிபரப்பும்போது, பாடல்களின் இடையே அறிவிப்பாளர்கள் குறுக்கிட்டு அறிவிப்பு செய்வது தற்போது சகஜமாக நடைபெறும் ஒரு விடயமாக இருந்து வருகின்றது.ஆனால், ஒலிபரப்பு நெறியின்படி, இவ்வாறு இடையே குறுக்கிடுவது தவறான ஒரு நடவடிக்கையாகவே ஆரம்ப காலங்களில் நோக்கப்பட்டது. அதாவது, வானொலி ஒலிபரப்பு எனும்போது அவை பிரதி அமைப்பினை முன்னிறுத்திய சூசிகையின் படியே நடைபெறுவதுண்டு.

அதாவது, இந்திந்த சந்தர்ப்பங்களில், இந்திந்த இடங்களில், எந்த நேரங்களில் எதை? எவ்வாறு? அறிவிப்பு செய்ய வேண்டும் என்பது குறித்து முன்கூட்டியே பிரதி அமைக்கப்பட்டிருக்கும். இந்த பிரதிகளின்படியே, அறிவிப்பாளர் தனது அறிவிப்பை மேற்கொள்வார். இந்த பிரதி அமைப்பிற்கு அமைவாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாடல்களின் நடுவேயோ, விளம்பரங்களின் நடுவேயோ, முக்கிய அறிவிப்புக்களின் நடுவேயோ அறிவிப்பாளர் குறுக்கிட்டு அறிவிப்பு செய்யக் கூடாது என்பது ஒரு தார்ப்பரியமாக இருந்து வந்துள்ளது. எவரேனும் தவறுதலாகவாவது அவ்வாறு செய்துவிட்டால் அது கன்னியமற்ற செயலாகவே நோக்கப்பட்டது. ஒருவர் பேசும்போது இன்னொருவர் இடையே குறுக்கீடு செய்வது ஒழுக்கப் பண்பற்ற செயலாக எவ்வாறு நோக்கப்படுகின்றதோ, அதேபோன்றுதான் இந்த செயற்பாடும் நோக்கத்தக்கதாக இருந்தது.

இன்னொரு வகையில் கூறுவதானால், வானொலி நேயர்களுக்கு இந்தச் செயற்பாடானது, இடையூறாகவும், எரிச்சலை ஏற்படுத்துவதாகவும் அமைவதுண்டு. ஏனென்றால், அறிவிப்பாளர்கள் இவ்வாறு குறுக்கீடு செய்வதானது, நேயர்களின் ரசனையை இடைஞ்சல் செய்யும் ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. எனவே தான் நெறிமுறைக்குட்பட்ட வானொலி நிலையங்கள் தமது அறிவிப்பாளர்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளை தவிர்க்குமாறு பணிப்பதுண்டு.

ஆனால், அண்மைக்காலமாக, ஒலிபரப்புத்துறையில் மாற்றங்கள், ஜனரஞ்சகப்படுத்தல்கள் எனும் பெயரில் இவ்வாறு குறுக்கீடு செய்வது சகஜமான ஒரு விடயமாக மாற்றம் கண்டுள்ளது. ஒலிபரப்புக்களின் நடுவே குறுக்கீடு செய்து அடிக்கடி பேசி அறிவிப்பு செய்வது தனிப்பாணியாக சிலரால் முன்னெடுக்கப்படுகின்றது. நேயர்கள் வானொலியை செவிமடுப்பது நிகழ்ச்சிகளுக்காகவா அல்லது அறிவிப்பாளர்களின் குரலுக்காகவா? என்பதை ஒலிபரப்பாளர்கள் சரிவர பிரித்தறியாதபோது இவ்வாறான தவறுகள் நேர்வதுண்டு. வணிக ரீதியில் இவ்வாறான செயற்பாடுகள் கடைப்பிடிக்கப் படுகின்றபோதிலும், வானொலி ஒலிபரப்பு பற்றி கற்க விரும்புகின்றவர்கள் இதுவொரு நெறிமுறை தவறிய செயற்பாடு என்பதை புரிந்துகொள்ள வேண்டியது கட்டாயமாகும்.



(தொடரும்)

-ரிஷபன்

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலத்திற்கு வெள்ளை மாளிகை (White house) என பெயர் வரக்காரணம் என்ன?



White house

1814 ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இம்மாளிகைக்கு பிரித்தானியர்களால் தீ வைக்கப் பட்டு அழிவுக்குள்ளானது. இதனால், இம்மாளிகை முழுவதும் கரும்புகை படிந்துகொண்டது. பின்னர் இம்மாளிகை புதுப்பிக்கப்பட்டபோது, வெள்ளைச் சுண்ணாம்புக் கலவையால் நிறம்பூசப் பட்டது. இவ்வாறு வெள்ளை நிறத்தினால் சுண்ணாம்பு பூசப்பட்டமையாலேயே இதற்கு 'வெள்ளை மாளிகை' என பெயரிடப்பட்டது.

பிரிட்டனின் 'பேக்கிங்ஹாம்' அரண்மனையின் உட்கட்டமைப்பு பற்றி உங்களுக்குத் தெரியுமா?

இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணியின் வாசஸ்தலமான பேக்கிங்ஹாம் அரண்மனையில் மொத்தமாக 775 அறைகள் உள்ளன. அங்கு சேவை செய்யும் ஊழியர்களுக்காக188 படுக்கை அறைகளும், 92 அலுவலக அறைகளும், 78 குளியலறைகளும் நிர்மாணிக்கப்பட்டது. இந்த மாளிகை 1850 ஆம் ஆண்டு எட்வர்ட் ப்ளேரெ என்பவரால் வடிவமைக்கப்பட்டது. அதன்பின் இந்த மாளிகை 1913 ஆம் ஆண்டு சேர் ஏஸ்டேன் வேப் என்பவரால் திருத்தியமைக்கப்பட்டது.



எட்வர்ட் ப்ளேரெ

சேர் ஏஸ்டேன் வேப்

பேக்கிங்ஹாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசுருமுனி விகாரை

இசுருமுனி விகாரையானது, கற்பாறைகளில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு வழிபாட்டுத் தலமாகும். இது கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் மன்னனால் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்தோடு, முதலாம் காசியப்ப மன்னன் ஆட்சியின்போது, இதனைப் புதுப்பித்து அவனின் மகளின் பெயரையும் தனது பெயரையும் சேர்த்து 'போதி உத்பலவன்னா கஸ்ஸபகிரி' என அழைத்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது.

இந்த விகாரையின் பிரதான வாயிலில் கல்லால் செதுக்கப்பட்ட மகர தோரணங்களைக் காணலாம். இந்த மகர தோரணம்


இசுருமுனி விகாரையின் முகப்பு தோற்றம்


மனிதனும் குதிரைத் தலையும் கொண்ட சிற்பம்


நீராடும் யானைகள்



காவற்கல்


10 ஆம் நூற்றாண்டுக்கு அண்மித்த காலத்துக்குரியவை என நம்பப்படுகின்றது. இங்குள்ள சிலைகளில் ஒன்றான காதலர் ஜோடி சிற்பம் ஐந்தாம் நூற்றாண்டிற்குரிய செதுக்கல் கலையாகும்.

இதனை தவிர்த்து, இங்கு மனிதனும் குதிரைத் தலையும் கொண்ட சிலை, யானைகளின் உருவங்கள் என்பனவும் இசுறுமுனி விகாரைச் சூழலில் காணப்படும் முக்கிய கலைப்பொக்கிஷங்களாகும். இங்குள்ள சிற்பங்களில் மனிதனது உருவமும், அவனுக்குப் பின்னால் பாறையின் உள்ளிருந்து வெளிவரும் குதிரையின் தலை கொண்ட சிற்பமும் 7 ஆம் நூற்றாண்டுக்குரியது. இது குளத்திற்கு மேலே உள்ள பாறையின் விளிம்பில் செதுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர கல்லில் செதுக்கப்பட்ட தனியானதொரு சிற்பத்தில் யானை தும்பிக்கையால் நீரை மேல்நோக்கி வீசி எறிந்து விளையாடுவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. பாறைச் சுவரின் மறுபுறத்தில் மூன்று யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அக்கால கைதேர்ந்த சிற்பிகளால் புடைப்பு முறையில் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


அரச குடும்பம்



சந்திர வட்டக்கல்


படிகட்டுக்கள்


காதலர் சோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கூகிள் நிறுவனத்தின் தரவுகள் சேமிப்பகம்




இன்றைய காலத்தில் இணையம் இன்றியமையாத விடயமாக மாறியுள்ளது. எமக்கு இணைய வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் கூகிள் நிறுவனம் முன்னணியில் திகழ்கின்றது. 1998 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கெலிஃபோர்னியா மாநிலத்தின் மென்லோ பார்க் எனுமிடத்தில்







நிறுவப்பட்ட கூகிள் நிறுவனமானது, இணைய வசதிகளை வழங்குவதுடன்; கணினி மென்பொருள் தயாரிப்பு, தொழில்நுட்பக் கருவிகள் உற்பத்தி என்பனவற்றை மேற்கொள்ளும் ஒரு பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனமாகும். ஜிமெயில், யூடியுப், கூகிள் மெப், கூகிள் ஸ்ட்ரீட் விவ் உட்பட, இணையத்துடன் தொடர்புபட்ட பல்வேறு தயாரிப்புகளையும் சேவைகளையும் கூகிள் நிறுவனமே வழங்கி வருகின்றது.

## தரவுகள் சேமிப்பகம்

கூகிள் நிறுவனமானது,எமது தரவுகள் அனைத்தையும் அதன் மிகப்பெரிய தரவுகள் சேமிப்பக தொகுதியிலேயே சேமித்து வைத்துள்ளது. அமெரிக்காவின் ஒரெகன் மாநிலத்திலேயே இந்த சேமிப்பகம் அமைந்துள்ளது. இதுவோர் அதி உயர் பாதுகாப்பு வலயமாகும். இங்கு வெளி நபர்கள் எவரும் உட்பிரவேசிக்க அனுமதி இல்லை என்பதுடன், கூகிள் நிறுவனத்தின் ஊழியர்கள்கூட உட்பிரவேசிக்க முடியாது. நிறுவனத்தின் உயர் அதிகாரிகளுக்கும் தொழில்நுட்ப அதிகாரிகள் சிலருக்கும் மட்டுமே இங்கு செல்ல அனுமதி உண்டு. இந்த தரவுகள் சேமிப்பகம் சுற்றாடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக கூகிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சேமிப்பகத்தைப் பார்வையிட அனைவருக்கும் வாய்ப்பு

இங்கு உட்பிரவேசிக்க எமக்கு அனுமதி இல்லாத போதும், அதனை யூடியுப் வீடியோ காட்சிகளினூடாக பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தரவுகள் சேமிப்பகத்தின் அனைத்துப் பகுதிகளும் வீடியோ எடுக்கப்பட்டுள்ளதுடன், இதனை யூடியுப் மூலம் இலகுவாகவும் இலவசமாகவும் கண்டுகளிக்க முடியும். 'கூகிள் கிளவுட்' பயன்படுத்தினால் 360 பாகை கோணத்தில் இந்த காட்சிகளை பார்வையிட முடியும்.

(இ)

உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக

வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions | the SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாடு' என்றால், அது பல்லின மக்கள் அதிகமாக வாழ்கின்ற-மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருக்கும் என்றே நாம் பொதுவாக கருதுவோம். எனினும், மிகவும் சிறிய நிலப்பரப்பில் அமைந்த நாடுகளும் உலகில் உள்ளன. ஐரோப்பா, கரீபியன் தீவுகள் மற்றும் பசுபிக் பிராந்தியத்திலேயே இவ்வாறான நாடுகள் பெரும்பாலும் காணப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை 400 சதுர கிலோமீற்றரிலும் குறைந்த நிலப்பரப்பைக் கொண்டவையாகும். அந்தவகையில், உலகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நாடுகளில், நிலப்பரப்பில் மிகவும் சிறிய நாடுகளாக கருதப்படும் பத்து நாடுகள் பற்றிய விபரங்களை நோக்குவோம்.


இந்
19
சத

# உலகின் மிகச் சிறிய நாடு




## மோல்ட்டா - 316 சதுர கி.மீற்றர்

இந்த நாடு, பிரதானமாக மூன்று தீவுகளை உள்ளடக்கியுள்ளது. அவை: கோஸோ, கொமினோ மற்றும் மோல்ட்டா என்பனவாகும். மோல்ட்டா தீவானது, ஏனையவற்றைவிட விசாலமானது. சுமார் 7ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைய வரலாற்றினைக் கொண்ட மோல்ட்டா, சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்த ஒரு நாடாகும். இங்கு நிலவும் வெப்பமான காலநிலையும் அழகிய கடற்கரையும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விடயங்களாக உள்ளன.




## மாலைதீவு - 298 சதுர கி.மீற்றர்

ஆசியாவின் பிரபல்யமான சுற்றுலா மையமாக மாலைதீவினைக் குறிப்பிடலாம். இது அளவிலும் சனத்தொகையிலும் ஆசியாவிலேயே சிறிய நாடாகக் கருதப்படுகின்றது. 1,192 தீவுகளை உள்ளடக்கிய ஒரு ராச்சியமே மாலைதீவு ஆகும். உலகில் நெருக்கடி மிகுந்த நாடுகளின் பட்டியலில் மாலைதீவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. போர்த்துகேயர்கள், ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்களின் காலனித்துவ நாடாக இருந்த மாலைதீவு, 1965இல் சுதந்திர அரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அழகிய கடற்கரைகளும் நீலப்பளிங்கு போன்று மிளிரும் கடலும் சுற்றுலாப் பயணிகளை பெருமளவில் ஈர்க்கக் காரணமாக உள்ளன.

## சென். கிட்ஸ் மற்றும் நேவிஸ் - 261 கி.மீற்றர்




ஐரோப்பியர்களினால் கைப்பற்றப்பட்ட ஆரம்பகால தீவுகளில் இந்த இரண்டு தீவுகளும் அடங்குகின்றன. இவை கரீபியன் கடலில் அமைந்துள்ளன. சுற்றுலாத்துறை, விவசாயம் மற்றும் சிறு உற்பத்திகள் என்பன இந்த நாடுகளின் பொருளாதாரத்திற்கு பலம் சேர்க்கின்றன. சீனி ஏற்றுமதி செய்யப்படுவதுடன், ஹோட்டல் தொழிற்துறைக்கு பிரதான இடம் வழங்கப்படுகின்றது.




## மார்ஷல் தீவுகள் - 181 சதுர கி.மீற்றர்

நூற்றுக்கணக்கான தீவுகளையும் ஆயிரக்கணக்கான சிறு தீவுகளையும் உள்ளடக்கியதாக, 29 பவளப்பாறைகளால் இணைக்கப்பட்ட ஒரு நாடே மார்ஷல் தீவுகள் ஆகும். இவற்றில் 24 தீவுகளிலேயே மக்கள் வாழ்கின்றனர். மார்ஷல் தீவுகள் 1986 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. கைவினைப்பொருள் உற்பத்தி, கொப்பரை, மீன்பிடி நடவடிக்கை மற்றும் சுற்றுலாத்துறை என்பன நாட்டின் பிரதான கைத்தொழில்களாகும்.



## லிச்டென்ஸ்டெய்ன் - 16

உயரமான மலைகளுக்கு மத்தியில
ஒரே ஒரு நாடாக லிச்டென்ஸ்டெய்ன்
சுவிற்சர்லாந்து மற்றும் ஒஸ்ட்ரியாவுக்
அமைந்துள்ள இந்த நாடு, உலகின் ப
ஒன்றாகும். ஜேர்ம மொழி பே
இளவரசர் ஒருவரால் நிர்வகிக்கப்படும்
விமான நிலையமொன்று இல்லாதமை
சுவிற்சர்லாந்தின் சூரிச் விமான நிலைய
இந்நாட்டிற்குள் பிரவேசிக்க முடியு



## சான் மெரினோ - 61

முழுமையாக இத்தாலியினால் சூ
உலகின் அமைதியான-பழமை வாய்
சிறப்பினைக் கொண்டது. மேலும், உ
நாடுகளில் ஒன்றாகவும், ஐரோப்பாவி
சிறிய நாடாகவும் இது உள்ளது. அத்
குறைவான நாடாகவும் இது கருதப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவுரு - 21 சதுர கி.மீற்றர்

அவுஸ்திரேலியாவின் வட கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நாட்டிலிருந்து வெளிப்பட்ட பொஸ்பேற் வளம் காரணமாக, 1980 இல் இந்த நாடு உலகப் பிரசித்தி பெற்றது. இங்கு 10 சதவீதமானவர்கள் அரசாங்க ஊழியர்களாக உள்ளனர். உலகில் அதிக பருமனான மனிதர்கள் இங்குதான் வாழ்கின்றனர். இதனால், இந்த நாட்டில் நீரிழிவு நோயாளிகளும் அதிகம். இங்கு வாழும் மக்களில் 40 சதவீதமானவர்கள் நோயாளிகளாவர்.

# ாடுகள் 10




## மொனாகோ - 2 சதுர கி.மீற்றர்




உலகின் பெரும்பாலான லட்சாதிபதிகளும் கோடீஸ்வரர்களும் வசிக்கும் நாடாகும். சூதாட்டம், ஆடம்பரப் பொருட்கள் மற்றும் சேவைகள் காரணமாக, இந்நாடு செல்வந்தர்களினதும் பணம் படைத்தவர்களினதும் சொர்க்கபுரியாகத் திகழ்கின்றது. நாட்டின் ஒரு பகுதி மத்தியதரைக் கடலால் சூழப்பட்டிருக்க, மற்றைய மூன்று பகுதிகளும் பிரான்ஸின் எல்லைகளாக காணப்படுகின்றன.




## டுவாலு - 26 சதுர கி.மீற்றர்

முன்பு 'எலிஸ் தீவுகள்' என்று அழைக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவுக்கும் ஹவாய் தீவுக்கும் இடையே பசுபிக் சமுத்திரப் பகுதியில் அமைந்துள்ள இந்நாட்டின் பிரதான தீவில் மட்டும் ஒரு வைத்தியசாலை இயங்குகின்றது. பிரித்தானிய காலனித்துவ நாடாக இருந்து, 1978 இல் சுதந்திரம் பெற்றது. இந்நாட்டுக்கு இலகுவில் சென்றடைய முடியாமல் இருப்பதனால், நாட்டின் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது.




## டெய்ன் - 160 சதுர கி.மீற்றர்

லகளுக்கு மத்தியில் அமைந்துள்ள
ிச்டென்ஸ்டெய்ன் விளங்குகின்றது.
ும் ஒஸ்ட்ரியாவுக்கு இடையே
நாடு, உலகின் பணக்கார நாடுகளில்
மொழி பே நாடாகும்.
் நிர்வகிக்கப்படும் இந்த நாட்டில்,
ான்று இல்லாதமை சிறப்பம்சமாகும்.
ரிச் விமான நிலையத்தினூடாகவே
பிரவேசிக்க முடியும்.




## னோ - 61 சதுர கி.மீற்றர்

இத்தாலியினால் சூழப்பட்ட நாடாகும்.
ான-பழமை வாய்ந்த சுதந்திர நாடு என்ற
ண்டது. மேலும், உலகின் செல்வந்த
கவும், ஐரோப்பாவின் மூன்றாவது
இது உள்ளது. அத்துடன், உழைப்புக்
கவும் இது கருதப்படுகின்றது.

## வத்திக்கான் - 0.44 சதுர கி.மீற்றர்

உலகின் மிகச் சிறிய நாடாக வத்திக்கான் உள்ளது. கத்தோலிக்கர்களினது புண்ணிய பூமி என்பதால், பரிசுத்தமான தேசமாகவும் கருதப்படுகின்றது. உலகின் மிகப்பெரிய தேவாலயமான சென். பீற்றர்ஸ் பெசிலிக்காவும் இங்குதான் அமைந்துள்ளது. மறுமலர்ச்சிக் காலத்தின் விசேட கலைப்படைப்புகளையும் இங்கு காணலாம்.




-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2006 ஆம் ஆண்டில் புளூட்டோ ஒரு குறுங்கிரகமாக அறிவிக்கப்படும் வரை, எமது ஞாயிற்றுத் தொகுதிக்குரிய கிரகங்களின் எண்ணிக்கை ஒன்பது ஆக இருந்தது. பின்னர், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கமைய, 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து புளூட்டோ கிரக அந்தஸ்தை இழந்தது. அதன் பின்னர், எமது ஞாயிற்றுத் தொகுதிக்குரிய கிரகங்களின் எண்ணிக்கை எட்டு எனக்கொள்ளப்பட்டது. எனினும், எமது சூரியனை சுற்றி சரியான பாதையில் பயணிக்கும் 'ஒன்பதாவது கிரகம்' ஒன்று இருப்பதாக பல ஆண்டுகளாக வானியல் அறிஞர்களிடையே கருத்து நிலவி வருகின்றது. ஆனால், அது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்நிலையில், எமது ஞாயிற்றுத் தொகுதியில் ஒன்பதாவது கிரகம் ஒன்று உள்ளதாகவும், இந்த கிரகம் காரணமாகவே, 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த டைனோசர்கள் அழிந்து போனதாகவும் அண்மையில் புதிய கருத்தொன்று பரவிவருகின்றது.




# டைனோசர்களின் அழிவுக்குக் காரணம் ஒன்பதாவது கிரகமா?

## புதிய கருத்து

ஒன்பதாவது கிரகம் அல்லது 'Planet X' என்று அழைக்கப்படும் இந்த மர்மக் கிரகம் காரணமாக, பூமியில் வால்வெள்ளிகளின் பொழிவு (comet showers) ஏற்பட்டதாகவும், இதனாலேயே பூமியிலிருந்து டைனோசர் இனம் முற்றாக அழிந்ததாகவும் அமெரிக்காவின் வானியற்பியலாளரான மைக் பிரவுன் தெரிவித்துள்ளார். இவர் அமெரிக்காவின் கெல்டெக் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த பிரபலமான விஞ்ஞானியாவார். இவரது கருத்தை ஒத்த கருத்தொன்றினையே பேராசிரியர் டெனியெல் விட்மயர் என்பவரும் முன்வைத்துள்ளார். இந்த ஒன்பதாவது கிரகமானது, எமது ஞாயிற்றுத் தொகுதியில் மறைந்திருப்பதாகவும், அது சூரியனைச் சுற்றி வரும் அதேவேளை, மெதுவாகச் சுழன்று 27 வருடங்களுக்கு ஒரு தடவை குய்ப்பர் வளைய மூடாகப் பயணிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்போது, அங்குள்ள வால்வெள்ளிகள் (வால்நட்சத்திரங்கள்) ஒன்பதாவது கிரகத்துடன் மோதி, வால்வெள்ளிகளின் பொழிவுக்கு உட்பட்டுள்ளதாக பேராசிரியர் டெனியெல் மேலும் தெரிவித்துள்ளார். இவர், அமெரிக்காவின் ஆகன்சாஸ் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற வானியற்பியல் பேராசிரியராவார்.

இந்த வால்வெள்ளிப் பொழிவானது, பூமியின் சுற்றுப்பாதை வரை இடம்பெறும் அளவுக்கு மிகவும் சக்தி வாய்ந்தது என்றும், அதற்கமையவே, அந்த வால்வெள்ளிப் பொழிவின் தாக்கத்திற்கு பூமியும் உட்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் டெனியெல் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே, அப்போது பூமியில் வாழ்ந்துள்ள டைனோசர்கள் பேரழிவுக்கு உட்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## ஒன்பதாவது கிரகம்

'Planet X' எனக் குறிப்பிடப்படுகின்ற ஒன்பதாவது கிரகமானது, எமது ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து தொலைவில் ஓர் எல்லையிலேயே அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அது எமது பூமியைவிட பத்து மடங்கு பெரியது என்றும், யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய கிரகங்களைப் போன்றிருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெசக் மலர்



★ தாவரவியல் பெயர்: *Dendrobium maccarthiae*

ஓர்கிட் தாவர குலத்தைச் சேர்ந்த வெசக் மலர் தாவரமானது, இலங்கைக்கு மட்டுமே உரிய ஒரு தாவர இனமாகும். மிகவும் அரிய வகைத் தாவரமாகவும் இது கருதப்படுகின்றது. தண்டிலிருந்து கீழ் நோக்கித் தொங்கும் விதத்தில் இத்தாவரத்தில் மலர்கள் மலரும். இலங்கையில் ஓர் அலங்காரத் தாவரமாகவும் இது உள்ளது. வணிக ரீதியிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மே மாதம் முழுவதும் மலர்கள் இருப்பதனால், இதனை 'வெசக் மலர்' என்று அழைப்பர். இலங்கையில் ஆளுநராகப் பணியாற்றிய பிரித்தானியரான சேர். மெக்கார்திக்கு கௌரவம் அளிக்கும் விதமாக இந்த தாவரத்திற்கு *Dendrobium maccarthiae* என்று பெயரிடப்பட்டுள்ளது. அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் காலி போன்ற பகுதிகளில் இந்த தாவரம் பெருமளவில் வளர்கின்றது. காடுகளிலும் குறிப்பாக, நீர்நிலைகளுக்கு அருகாமையில் உள்ள நிழல் கொண்ட மரங்கள் மற்றும் கிளைகளிலும் படர்ந்து வளரும். இதன் நீளமான தண்டுகள் கீழ் நோக்கி தொங்கிக்கொண்டிருப்பதுடன், மெல்லிய வேர்கள் பெருமளவில் தாவரத்தில் ஒட்டியிருக்கும்.

# நீரில் மூழ்கும் கரையோரப் பகுதிகள்



சுனாமி, சூறாவளி மற்றும் கடல் நீர் மட்டம் உயர்வு போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக, கரையோரப் பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான வேலைத் திட்டமொன்று பேராதனை பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தின் சிவில் பொறியியல் பிரிவின்கீழ் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.



கடல் நீர் மட்டம் உயர்வடைவதன் காரணமாக, நீரில் மூழ்கக் கூடிய அபாயத்தை எதிர்கொண்டுள்ள கரையோரப் பகுதிகளை கண்டறிதல், ஆபத்து ஏற்படக்கூடிய காலப்பகுதிகளை இனங்காணல், அவை பற்றித் தீர்மானித்தல் என்பன இந்த வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் கரையோரப் பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் குறித்து மிக துல்லியமாக அறிவதற்கு வாய்ப்புக் கிட்டும். மேலும்; சுனாமி, புயல், கடல் மட்ட அதிகரிப்பு போன்ற இயற்கை அனர்த்தங்கள் குறித்து சரியாகப் புரிந்துகொண்டால் உயிராபத்துக்களையும் சொத்து இழப்புக்களையும் தவிர்ப்பதற்கான உத்திகளை அறிந்துகொள்ளவும் அதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளவும் முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மலேரியா ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கை



மலேரியா நோய் இல்லா தொழிக்கப்பட்ட நாடாக இலங்கையை பிரகடனப் படுத்துவதற்கான வாய்ப்பு தற்போதளவில் ஏற்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பாலித்த மகிபால தெரிவித்துள்ளார். மலேரியா மிகவும் பழமையானதொரு நோயாகும். இலங்கையிலும் இதுவோர் உயிர்க்கொல்லி நோயாகவே இருந்துள்ளது. எனினும், 2012 ஆம் ஆண்டு முதல் மலேரியா இல்லாதொழிக் கப்பட்டுள்ள நாடாக இலங்கை திகழ்ந்து வருகின்றமை குறிப்பி டத்தக்கது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையிலி ருந்து மலேரியா நோயை முற்றாக ஒழிக்கக்கூடியதாக இருக்கும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கையில் மலேரியா நோயாளர்கள் எவரும் இனங் காணப்படவில்லை என்றும், 1999 ஆம் ஆண்டில் இலங்கையில் 264,549 மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டதாகவும், எனினும், 2012 ஆம் ஆண்டளவில் எந்தவொரு நோயாளரும் இனங்காணப்பட வில்லை என்றும் அந்த நிறுவனம் மேலும் குறிப் பிட்டுள்ளது. மலேரியா நோய்க்கெதிராக உலக சுகாதார நிறுவனத்தின் 2016-2030 வேலைத் திட்டத்திற்கு இணையாக வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையொன் றிலேயே இத்தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அண்ணாவுக்கும் தம்பிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

මල්ලි: අයියේ! ලබන සතියේ වෙසක්.
அய்யே! லபன சதியே வெசக்.
**தம்பி: அண்ணா! வருகிற கிழமை வெசக்.**

අපි වෙසක් කූඩු හදන්නේ නැද්ද?
அப்பி வெசக் கூடு ஹதன்னே நெத்த?
நாங்கள் வெசக் கூடு கட்டுவதில்லையா?

අයියා: හදන්න ඕනේ මල්ලි.
ஹதன்ன ஓனே மல்லி.
**அண்ணா: கட்ட வேண்டும் தம்பி.**

මල්ලි: අපි මේ සැරේ ලොකු වෙසක් කූඩුවක් හදමු.
அப்பி மே செரே லொகு வெசக் கூடுவக் ஹதமு.
**தம்பி: நாங்கள் இம்முறை பெரிய வெசக் கூடொன்று கட்டுவோம்.**

අයියේ, කමලුත් උදව් කරන්න එනව කිව්වා.
அய்யே, கமலுத் உதவ் கரன்ன எனவ கிவ்வா.
**அண்ணா, கமலும் உதவி செய்ய வருவதாகச் சொன்னான்.**

අයියා: අපි කොහේද වෙසක් කූඩුව එල්ලන්නේ?
அப்பி கொஹேத வெசக் கூடுவ எல்லன்னே?
**அண்ணா: நாங்க்ள் வெசக் கூட்டினை எங்கே தொங்கவிடுவோம்?**

මල්ලි: වෙනද වගේ අඹ ගහේම එල්ලමු.
வெனத வகே அம்ப கஹேம எல்லமு.
**தம்பி: வழமைபோல மா மரத்திலேயே தொங்கவிடுவோம்.**

අයියා: වැස්සොත් මොනවද කරන්නේ?
வெஸ்ஸொத் மொனவத கறன்னே?
**அண்ணா: மழை பெய்தால் என்ன செய்வது?**

මල්ලි: වහින්නේ නැහැ අයියේ. ආ.. අන්න, කමලුත් එනවා.
வஹின்னே நெஹெ அய்யே. ஆ... அன்ன, கமலுத் எனவா.
**தம்பி: மழை பெய்யாது அண்ணா. ஆ... அதோ, கமலும் வருகிறான்.**

කමල්: අයියේ, කොහොමද?
அய்யே, கொஹொமத?
**கமல்: அண்ணா, எப்படி?**

අයියා: හොඳයි මල්ලි.
ஹொந்தய் மல்லி.
**அண்ணா: நலம் தம்பி.**

කමල්: වෙසක් කූඩු හදන්න ඔයාලට මමත් උදව් වෙන්නම්.
வெசக் கூடு ஹதன்ன ஒயாலட்ட மமத் உதவ் வென்னம்.
**கமல்: வெசக் கூடு கட்ட உங்களுக்கு நானும் உதவி செய்கிறேன்.**

අයියා: හොඳයි කමල්. ඔයා ඉරිදට එන්න.
ஹொந்தய் கமல். ஒயா இரிதட்ட என்ன.
**அண்ணா: நல்லது கமல். நீங்கள் ஞாயிற்றுக்கிழமை வாருங்கள்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. வெசக் கூடொன்று கட்டுவோம்.
   ........................................
2. கமலும் வருவதாகச் சொன்னான்.
   ........................................
3. ஞாயிற்றுக்கிழமை வாருங்கள்.
   ........................................




**Will** சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால 'வினா' நிலை வாக்கியங்கள் மற்றும் **'going to'** சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால 'வினா' நிலை வாக்கியங்கள் ஆகியவற்றுடன் **What, Where, When, How** முதலான வினாச்சொற்களைக் கையாளும்போது, அவ்வாக்கியங்கள் எவ்வாறு அமைகின்றன என்பதை மேலும் இங்கே பார்ப்போம்.

அ) What will he buy for dinner?
அவன் இரவுணவுக்கு என்ன வாங்குவான்?

ஆ) What is he going to buy for dinner?
அவன் இரவுணவுக்கு என்ன வாங்கப் போகின்றான்?

★ What will he buy?
அவன் என்ன வாங்குவான்?

★ What is he going to buy?
அவன் என்ன வாங்கப் போகின்றான்?

★—★—★—★

இ) When will she start the home work?
அவள் எப்போது வீட்டு வேலையை ஆரம்பிப்பாள்?

ஈ) When is she going to start the home work?
அவள் எப்போது வீட்டு வேலையை ஆரம்பிக்கப் போகின்றாள்?

★ When will she start it?
அவள் அதை எப்போது ஆரம்பிப்பாள்?

★ When is she going to start it?
அவள் அதை எப்போது ஆரம்பிக்கப் போகின்றாள்?

★—★—★—★

உ) How will it cross the river?
அது எவ்வாறு ஆற்றைக் கடக்கும்?

ஊ) How is it going to cross the river?
அது எவ்வாறு ஆற்றைக் கடக்கப் போகின்றது?

★ How will the dog cross the river?
அந்த நாய் எவ்வாறு ஆற்றைக் கடக்கும்?

★ How is the dog going to cross the river?
அந்த நாய் எவ்வாறு ஆற்றைக் கடக்கப் போகின்றது?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் தொடர்

## மே 19 இல் ஆரம்பம்




இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் மே மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை நாம் அறிந்ததே. இப்போட்டிகளுக்கான இலங்கை அணியின் பெயர்ப் பட்டியலை இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழு வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலின்படி, துடுப்பாட்ட வரிசையில் மூன்றாம் இடத்தை விக்கெட் காப்பாளர் - நிரோஷன் திக்வெல்லவிற்கு வழங்கப்பட்டுள்ளது. திரிமான, மெத்யூஸ், சந்திமல் ஆகியோர் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கவுள்ளனர். மேலும், தில்ருவன் பெரேரா, தசுன் ஷானக்க, தனஞ்ஜய சில்வா, மிலிந்த ஆகியோர் சகலதுறை ஆட்டக்காரர்களாகவும் களம் இறங்கவுள்ளனர்.

தம்மிக்க பிரசாத், சுரங்க லக்கமால், ஷமிந்த எரங்க, நுவன் பிரதீப், துஷ்மன் ஷமீர ஆகியோர் வேகப் பந்து வீச்சாளர்களாக போட்டியிடவுள்ள அதேவேளை, ரங்கன ஹேரத் சுழல்பந்து வீச்சாளராக ஈடுபடுத்தப்படவுள்ளார். இம்முறை அதிக எண்ணிக்கையிலான வேகப் பந்து வீச்சாளர்கள் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெட்ரிட் போட்டியில் செரினா இல்லாமை...

## சுகவீனம்தான் காரணமாம்

'ஸ்பெயின்' மெட்ரிட் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் கலந்து கொள்ளாமைக்கு சுகவீனமே காரணம் என்று கூறப்படுகின்றது. இது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள செரினா, தனக்கு ஏற்பட்ட கடுமையான தடிமன் காரணமாகவே, மெட்ரிட் போட்டியிலிருந்து விலகியதாக குறிப்பிட்டுள்ளார்.



மேலும் இதற்கு முன்னதாக நடைபெற்ற மாஸ்டர்ஸ் போட்டிகளிலும் உடல் உபாதையின் காரணமாக, செரினா போட்டியிடாததும் குறிப்பிடத்தக்கது. அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற 'லொரியஸ்' விருது விழாவில் வருடத்தின் சிறந்த வீரர் என்ற பட்டத்தை செரினா வில்லியம்ஸ் வென்றமை நினைவுகூரத்தக்கது.

# ரொனால்ட்டோ வழமைக்கு திரும்பியுள்ளார்



வலது காலில் ஏற்பட்ட உபாதையின் காரணமாக, கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இருந்த கிரிஸ்டியானோ ரொனால்டோ தற்போது ஆரோக்கியமான நிலைக்கு திரும்பியுள்ளமையால் மீண்டும் போட்டிகளில் கலந்துகொள்ளவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்படி அவர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்ற முதன்மை நிலை போட்டித் தொடர் பலவற்றில் ரொனால்ட்டோவினால் கலந்துகொள்ள முடியாமல் போனமையினால் பல வாய்ப்புக்களையும் இழக்க வேண்டியேற்பட்டது. இருப்பினும் தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளமையினால் தற்போது நடைபெறும் 'செம்பியன்ஸ் லீக்' போட்டிகளில் 'ரியல் மெட்ரிட்' அணியின் சார்பாகவும் அவர் போட்டியிடவுள்ளார். 31 வயதாகின்ற ரொனால்டோ ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் 'போர்த்துக்கல்' அணியின் சார்பாக போட்டியிடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் களத்தில் டைகர் வுட்ஸ்



தற்போது சர்வதேச 'கொல்ஃப்' (Golf) வீரர்களுள் மிகப் பெரிய பணக்காரராக கருதப்படுகின்ற டைகர் வுட்ஸ் கடந்த வருடத்தில் கொல்ஃப் ஆட்டக்களத்தில் அதிகம் காணப்படவில்லை. இருப்பினும் அவர் மீண்டும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் கொல்ஃப் போட்டிகளில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாக பி.பி.ஸி. செய்தி தெரிவித்துள்ளது. இதன்படி, ஓகஸ்ட் மாதம் அமெரிக்காவில் நடைபெறும் 'அமெரிக்க பகிரங்க கொல்ஃப்' போட்டிகளில் கலந்துகொள்வதற்கு அவர் பதிவுகளை மேற்கொண்டிப்பதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

டைகர் வுட்ஸ் கடைசியாக கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற Wyndham Championship போட்டித் தொடரிலேயே கலந்துகொண்டிருந்தார். இருப்பினும் இதில் அமெரிக்காவின் டேவ்ஸ் லவ் என்பவரே வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** குளிர்த்தன்மை அதிகரித்தவுடன் வாயில் நடுக்கம் ஏற்பட்டு பற்கள் உரசி 'கட கட' என்று சத்தம் ஏற்படுவது ஏன்?

**பதில்:** எமது சுற்றாடல் அதிக குளிர்ச்சி யடைந்ததும் எமது உடலிலிருந்து அதிகளவு வெப்பம் வெளியேறுகின்றது. எனினும் அதிக சுவாசத்தின் மூலம் நாம் சக்தியினை எரித்து உடல் வெப்பநிலையை தக்கவைத்துக் கொள்வதால் உடல் குளிர்மையடைகின்றமை தவிர்க்கப் படுவதுடன், மிஞ்சிய சக்தி தசைகளில் மேலதிக இயக்கத்திற்காக செலவிடப்படுகின்றது.



உடலில் பற்கள் பொருந்தியிருக்கும் தாடைப் பகுதியில் அதிகளவான அசையும் தசை நார்கள் இணைந்துள்ளமையால் குளிரின் போது தாடை தசைகள் வேகமாக செயற்படும். இதனால் பற்களும் மேலும் கீழும் ஒன்றுடன் ஒன்று உரசுகின்றன.




**கேள்வி:** சில பறவைகள் கூட்டாக ஆங்கில 'V' வடிவத்தில் பறப்பது ஏன்?

**பதில்:** தூர நாடுகளுக்கு பறந்து செல்லும் பறவைகள் தமது சக்தியினை விரயம் செய்யாமல் இருக்க முயற்சிக்கின்றன. அதனால், 'V' அமைப்பில் செல்லும்போது, வளிமண்டலத்தில் உள்ள தாழ் அமுக்கத்தை இலகுவாக ஊடறுத்து செல்ல முடியும். இதனால், கண்டங்கள் தாண்டி பறவைகள் 'V' அமைப்பில் பறக்கின்றன. அவ்வாறு ஒரு பறவையின் தலைமையில் பறக்கும்போது தலைமையேற்றுப் பறக்கும் பறவைக்கு களைப்பு வரும் பட்சத்தில் பறக்கும் ஏனைய பறவைகளில் ஒன்று தலைமையைப் பொறுப்பேற்றுப் பறப்பதற்கு இந்த 'V' அமைப்பு இலகுவாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**கேள்வி:** இதயக் கோளாறுகளின்போது பைபாஸ் சத்திரசிகிச்சையினை விட 'கிலேஷன் தெரப்பி' (Chelation therapy) பொருத்தமானது என்று சிலர் குறிப்பிடுவது ஏன்?

**பதில்:** **'Coronary by pass'** சத்திரசிகிச்சையானது, இதயத்தில் அடைப்பட்டுள்ள இரத்தக் குழாயினை அப்புறப்படுத்தி அந்த இடத்திற்கு நோயாளியின் கால், கையிலிருந்து பெறப்படும் இரத்த நாளத்தினைப் பொருத்துவதாகும். இந்த சிக்கலான சத்திரசிகிச்சையால் நோயாளிக்கு அச்சம் ஏற்படுகிறது.

ஆனால், **'Chelation therapy'** என்பது EDTA என்ற பதார்த்தத்தினையும் தேவையான கனியுப்புக்களையும் விற்றமின் அடங்கிய சேலைன் மற்றும் 5 சதவீத டெக்ஸ்ட்ரோன் கலவையாக்கி இரத்த நாளத்தினுள் செலுத்துவதன்மூலம் இரத்த நாளத்தில் அடைப்பட்டிருக்கும் கல்சியம் படிவினை இலகுவாக அகற்றிக்கொள்ளளும் முறையாகும். இதனால், இரத்த நாளத்தில் சரியான முறையில் இரத்தம் பயணிக்கும். சத்திரசிகிச்சையின்றி இந்த சிகிச்சை மேற்கொள்ளப்படுவதை நோயாளிகள் பெரிதும் விரும்புகின்றனர்.





# வனப்பு மிகு கடற்கரை 2016

## அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி



### தலைப்பு

கடற் பன்றிகள், கடல் ஆமைகள், கண்டல் தாவர சூழல், பவளப்பாறைகள் ஆகிய கரையோர வளங்கள் மற்றும் கடற்கரை சார்ந்த எந்தவொரு நிகழ்வும்

### போட்டி பற்றிய தகவல்களும் நிபந்தனைகளும்

ஒருவர் ஒரு சித்திரத்தினையே சமர்ப்பிக்க முடியும். சித்திரத்தின் அளவு 35 செண்ரி மீற்றர் மற்றும் 45 செண்ரி மீற்றர் ஆக இருக்க வேண்டும். எந்தவொரு ஊடகத்தினையும் நிறங்களுக்காக பயன்படுத்தலாம். சித்திரத்தின் பின்பகுதியில் போட்டியாளரின் பெயர், தனிப்பட்ட விலாசம், தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் பாடசாலை, வகுப்பு, பாடசாலையின் முகவரி மற்றும் போட்டியிடும் பிரிவு ஆகியவற்றினை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

### போட்டிப் பிரிவு

முன்பள்ளி மாணவர்கள்:

ஆரம்ப நிலை: 1, 2, 3, 4, 5 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்.

கனிஷ்ட பிரிவு: 6, 7, 8, 9, 10 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

சிரேஷ்ட பிரிவு: 11, 12, 13 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

தமது சித்திரத்தினை 2016 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*'கடற்கரையின் வனப்பு - 2016'*
*அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி,*
*இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்,*
*இல. 150, பழைய காலி வீதி, வலான, பாணந்துறை.*

மேலதிக விபரங்களுக்கு 038- 3370522 என்னும் தொலைபேசி இலக்கங்களினூடாக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள். போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் எக்காரணங்களுக்காகவும் மீள அளிக்கப்பட மாட்டாது.

### பணப் பரிசில்கள்

முன் பள்ளி
முதலாம் இடம் ரூ. 7,000.00
இரண்டாம் இடம் ரூ. 5,000.00
மூன்றாம் இடம் ரூ. 3,000.00

ஆரம்ப நிலை
முதலாம் இடம் ரூ. 10,000.00
இரண்டாம் இடம் ரூ. 7,000.00
மூன்றாம் இடம் ரூ. 5,000.00

கனிஷ்ட பிரிவு
முதலாம் இடம் ரூ. 15,000.00
இரண்டாம் இடம் ரூ. 10,000.00
மூன்றாம் இடம் ரூ. 7,000.00

சிரேஷ்ட பிரிவு
முதலாம் இடம் ரூ. 20,000.00
இரண்டாம் இடம் ரூ. 15,000.00
மூன்றாம் இடம் ரூ. 12,000.00

ஒரு பிரிவில் தெரிவு செய்யப்படும் சிறந்த நூறு சித்திரங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.


Columbus ZOO and Aquarium



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## அறிவுக்கு விருந்து (04.05.2016) விடைகள்

shoe
duck
doll
globe
block
green

| | | | | | |
|---|---|---|---|---|---|
| x | k | c | o | l | b |
| l | n | e | e | r | g |
| l | g | l | o | b | e |
| o | q | n | c | w | c |
| d | n | s | h | o | e |
| u | w | k | c | u | d |

## A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக







## குறுக்கெழுத்துப் போட்டி: 188

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | |
| | ■ | | 3 | | 4 |
| 5 | | 6 | | | ■ |
| | ■ | 7 | | | |
| ■ | ■ | | | 8 | |
| 9 | | | | ■ | 10 |

### மேலிருந்து கீழ்

01. வளர்பிறையை அடுத்து நிகழ்வது.
03. தர்மம் - எதிர்ச்சொல். (குழம்பியுள்ளது)
04. மலை. (தலைகீழ்)
06. தர்க்கம். (குழம்பியுள்ளது)
08. பிரயாணிகள் தங்கி ஓய்வெடுக்கும் இடம். (குழம்பியுள்ளது)
10. மாமி என்றும் அர்த்தப்படும். (தலைகீழ்)


### இடமிருந்து வலம்

01. பெறுமதி வாய்ந்த மரம்.
02. விளக்கு எரிய இதுவும் தேவை.
03. அரக்கன்- எதிர்ப்பாற்சொல். (குழம்பியுள்ளது)
05. விடாப்பிடி என்றும் அர்த்தப்படுத்தலாம்.
07. சொல்.
08. ஒலி. (குழம்பியுள்ளது)
09. தோடு. (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 187 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ஒ | ய் | யூ | 2தி | ய | ம் |
| டை | 3கா | ■ | ன் | ■ | |
| ■ | ■ | ■ | மை | து | 4கோ |
| 5ப | ச | ளை | ■ | த் | ■ |
| ட் | ■ | ■ | ■ | 6வா | தை |
| டு | ண் | க | ற் | 7க | ■ |

## நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னத்தில் தருக




## இடைவெளிகளை நிரப்புக




## விஜய் அறிவுக்கு விருந்து




வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஜய் விழா உலா**
**த.பெ. எண் 2037**
**கொழும்பு**



மீயல்லையைச் சேர்ந்த இப்திகார்-பர்மிலா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஆதிப் அஹமட், தனது முதலாவது பிறந்தநாளை 14.05.2016 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# டைனோசர்கள் தொடர்பான ஊகங்கள்



டைனோசர்கள் உலகில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் அவற்றின் புதைபடிமங்களின்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அக்காலங்களில் புவிவாழ் உயிரினங்களில் டைனோசர்களே அதிக பலம் வாய்ந்ததாகவும் ஆற்றல் மிக்கவையாகவும் திகழ்ந்துள்ளன.

இவற்றில் அனேகமானவை தாவர உண்ணிகளாகும். சில மிக ஆக்ரோஷமாக தாக்குதல்களை நடாத்தும் இயல்புகளைக் கொண்டவை. டைனோசர்கள் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வந்தபோதிலும், அவை புவியில் இருந்து எவ்வாறு அழிந்தன தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவற்றின் அழிவு தொடர்பாக வெளியிடப்படும் முடிவுகள் ஊகங்களாக மட்டுமே உள்ளன. அந்தவகையில்,



டைனோசர்களின் நிறம் என்ன? என்பது தொடர்பான வாதப்பிரதிவாதங்களும் உள்ளன.

ஒவ்வொரு டைனோசர் இனத்திற்கும் ஏற்ப அதன் நிறம் மாறுபட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. எனினும், டைனோசர்களின் நிறம் தொடர்பான கருத்துக்களும் ஊகங்களாகவே உள்ளன. எனினும், டைனோசர் எனும் உயிரினம் புவியில் வாழ்ந்தது என்பது மட்டும் ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



எஸ்.சரணியா, ஓலிரோசரி தமிழ் ம.வித்., பொகவந்தலாவ.



எஃப்.அன்வரா, லதாத் பாலர் பாட., கொடபிடிய.



கெ.கிஷாந்தி, இ/ ஸ்ரீ கிருஷ்ணா த.வித்.



ரா.துமேஸ் பிரியா, தமிழ் மகளிர் ம.வித்., பதுளை.



எஃப்.முஹம்மத், லாஹிரா ஆ.கல்., கடுகஸ்தோட்டை.



எஸ்.சரண் நிலுஸ்கன், கியூ.தமிழ் ம.வித்., நுவரெலியா.



எம்.இல்மா, பாலாந்தொட்டை மு.வித்., பாலாந்தொட்டை.



ந.பிரவீன், யாழ்/இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



ந.கோபிதன், பிறமண்டு வித்., வவுனியா.



எம்.இம்ரான், அல்-மின்ஹாஜ் மு.ம.வித்., பெருக்குவட்டான்.



மா.அஹீல் அகமட், தி/கிண்ணியா ம.கல்., கிண்ணியா-03.



தி.வெனியெல், கமு/கமு கார்மேல் பற்றிமா தே.பாட., கல்முனை.



உ.மிதுசியா, பிஷப்ஸ் கல்., கொழும்பு-03.



வி.ஹரிதாஸ், புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.



# அழுவது உடலுக்கு நல்லது

வேதனைகள், துன்பத்தின் போது வாய்விட்டு அழுவது ஆரோக்கியமான விடயம் என்றே ஆய்வுகள் கூறுகின்றன.

அழுவதன்மூலம் கவலைகள், மன இறுக்கம் என்பனவற்றை மிக இலகுவாகவே எதிர்கொள்ள முடியும் என்றும் கூறப்படுகின்றது. வேதனையான, துன்பமான நிகழ்வு ஒன்றின்மூலம் ஏற்படும் அழுகை உணர்வை வலுக்கட்டாயமாக அடக்குதல் இதய நோய்கள் மற்றும் உடல் நலக் குறைவுகளுக்கு வழி வகுக்கலாம். ஆகவே, வாய்விட்டு அழுவதே ஆரோக்கியமான விடயம் என ஆய்வுகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பிரபல்யமானவர்கள்

## புலவர் குமாரசுவாமி



இலங்கையின் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு தொண்டாற்றிய பலரில் குமாரசுவாமி புலவர் முக்கிய இடத்தை வகிக்கிறார். இவர் யாழ்ப்பாண நகரில் சுன்னாகம் என்னும் இடத்தில் அம்பலவாணர் சிதம்பரம்மையார் தம்பதிகளின் மகனாக 1854 ஆம் ஆண்டு தை மாதம் 18 ஆம் திகதி பிறந்தார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் பயின்றார். இதன்பின்னர் தமிழ் மொழியில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதற்காக இவரது தந்தையார் இவரை சுன்னாகம் முருகேசு பண்டிதரிடம் தமிழ் மொழியை பயில அனுப்பிவைத்தார். இவர் கல்வி கற்கும் காலத்தில் தமிழுக்கும் சைவத்திற்கும் பெரிதும் தொண்டாற்றிய ஆறுமுக நாவலரின் அறிமுகம் கிடைத்தது. நாவலரின் அறிவுரைக்கிணங்க குமாரசுவாமி புலவர் அவர்கள் வடமொழியை கற்கத் தொடங்கினார்.

அதனால், இவர் தமிழ் மொழியுடன் வடமொழியிலும் சிறந்த ஆளுமை கொண்டவராக திகழ்ந்தார். இதனால், வடமொழி நூல்கள் பலவற்றை இவர் தமிழில் மொழிபெயர்த்தும் உள்ளார்.

யாழ்ப்பாணம், ஏழாலையில் 'சைவப்பிரகாச' வித்தியாசாலையில் உதவியாசிரியராகவும் புலவர் அவர்கள் பணியாற்றினார். இதனால், சிறந்த கல்விமான்களை சமூகத்தில் உருவாக்கும் சந்தர்ப்பம் புலவருக்கு கிடைத்தது.

இவரின் அனுசரணையுடன் பல தமிழ் அகராதிகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1901 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மதுரை தமிழ் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி புலவர் அவர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி, தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கு வினாத்தாள்களையும் எழுதி அனுப்பியுள்ளார். இவ்வாறு பல தொண்டுகளை தமிழ் மொழிக்கு செய்த குமாரசுவாமி புலவர் அவர்கள் 1922 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23 ஆம் திகதி இவ் உலக வாழ்வை நீத்தார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

# தெரிந்து கொள்வோம்



★ ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சுதந்திர சிலையின் உயரமென்ன?

சிலையின் உயரம் 151 அடி. (154 அடிஉயரமான மேடையில் நிறுவப்பட்டுள்ளது)




★ சினிமா வரலாற்றில் முதன்முதலில் வெளிவந்த துப்பறியும் படம் எது?

The Great Train Robbery

★ சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையம் எங்கே உள்ளது?

பிலிப்பைன்ஸ்

★ பாகிஸ்தான் நாட்டின் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதல் பெண் பிரதமர் யார்?

பெனாசீர் பூட்டோ





★ நாம் உண்ணும் உணவு இரைப்பையில் எவ்வளவு நேரம் தங்கியிருக்கும்?

3-4 மணி நேரம்

★ தேச வழமைச் சட்டம் எந்த சமூகத்திற்குப் பொருந்தும்?

யாழ்ப்பாண தமிழ் மக்கள்

★ சீனாவின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை யார்?

லியுயங்



★ இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு ஜப்பான் நாட்டில் சிலை எழுப்பப்பட்டுள்ளது. அந்த ஜனாதிபதி யார்?

ஜே.ஆர்.ஜயவர்தன

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD




★ 4000 English Letter Writing Software




★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

04.05.2016 'தூவானம்' கேள்விக்கான விடை: வில்லியம் மார்ட்டின்

Pendrive வெற்றியாளர்: என்.அகீதா பானு, 49A,போகொடவத்த வீதி, கண்டி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:

Pen Drive போட்டி (18.05.2016) விஜய் த.பெ.இல 2037 கொழும்பு

**இவ்வார கூப்பன்:**

18.05.2016

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தெ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுப் பாடும் கண்ணாடிக் குவளை



விஞ்ஞான விந்தைகள்

**தேவைப்படும் பொருட்கள்:**

வைன் அருந்தும் கண்ணாடிக் குவளைகள் இரண்டு
தண்ணீர்.
பற்குத்தும் குச்சி.

**செய்முறை:**

வைன் குவளைகளில் சம அளவு நீரினை நிரப்பிக் கொள்ளுங்கள். உங்கள் விரலினால் குவளையின் முனையினை அழுத்திப் பிடித்து சுற்றுங்கள். பின்னர் இரு குவளைகளிலும் விரலினால் அழுத்தும் போது புதிய இசையை நீங்கள் உணர்வீர்கள்.



## மற்றுமொரு களிப்பூட்டும் செயற்பாடு

முதலாவது கண்ணாடிக் குவளையின் முனையில் பற்குத்தும் குச்சியினை வைத்துக் கொள்ளுங்கள். இதன் அருகில் இரண்டாவது குவளையினை மோத முடியாத வகையில் வைத்து விடுங்கள்.

அதன் பின்னர் இரண்டாவது குவளையின் முனையில் விரலால் அழுத்தி இசையை உருவாக்குங்கள். எனினும் உங்கள் கண் பார்வை எப்போதும் பற்குத்தும் குச்சியின் மீதே இருக்கட்டும். இப்பொழுது பற்குச்சி அசைவதனைக் காண்பீர்கள்.

## என்ன நடக்கின்றது?



கண்ணாடிக் குவளையில் விரலை அழுத்தும் போது, அது ஒட்டும். அத்தோடு, விரல் நழுவிச் செல்லும் அதனால் கண்ணாடியில் அதிர்வு ஏற்படுகின்றது. இதற்கு காரணம் கண்ணாடியில் உள்ள படிகமேயாகும்.

அத்தோடு, நீங்கள் இரு குவளையில் சம அளவு நீரே ஊற்றினீர்கள். இதனால் இரண்டாவது கண்ணாடிக் குவளையும் முதலாவது கண்ணாடிக் குவளை அளவுக்கு அதிர்கின்றது. முதலாவது கண்ணாடியில் உருவாகும் அதிர்வு அனைத்து திசைகளுக்கும் பரவுகின்றது. இதனால் அருகில் இருந்த இரண்டாவது கண்ணாடிக் குவளையில் அதிர்வு ஏற்பட்டு பற்குச்சி அசைகின்றது.

### மற்றுமொரு ரகசியம்

* எமது காதுகளில் ஏற்படும் அதிர்வுகளினாலேயே நாம் ஒலியினைக் கேட்கின்றோம்.
* ஒலி ஊடுருவிப் பயணிக்காது.
* ஒலிகள் பற்றிய விஞ்ஞான ஆய்வுகளை 'எக்கவுஸ்டிக்கிஸ்' என அழைப்பர்.
* பார்வையைவிட ஒலிகளுக்கு நாம் எதிர்விளைவு காட்டுகின்றோம்.

# ஹெயிட்டி

அமெரிக்காவிலுள்ள தீவுகளில் ஹெயிட்டியும் ஒன்றாகும். இங்கு 17 ஆம் நூற்றாண்டளவில் பிரான்ஸின் ஆட்சி நிலவியது. இந்த தீவின் ஒரு பகுதியில் டொமினிக்கன் குடியரசு அமைந்துள்ளது.

டாய்னோ இந்தியர்களே, அந்நாட்டின் ஆரம்பக் குடிகள்.

கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1492 இல் இந்நாட்டைக் கண்டுபிடித்தார்.

1803 இல் பிரான்சியரின் ஆதிக்கத்திற்கு எதிரான புரட்சி

1803 இல் கிடைத்த சுதந்திரத்தை, குறிப்பாக உருவாக்கப் பட்ட 'Unknown Maroon' என்ற சிலை.

பெரும் பகுதி மலைத்தொடர்களால் மூடப்பட்டுள்ளது.

நாணயம் - ஹெயிட்டி கொயுர்தே.

பாரம்பரிய உடை.



**தேசிய பறவையும் மலரும்**
தேசிய பறவை - ஹிஸ்பெனி யோலான் ட்ரோஜன் பறவை
தேசிய மலர் - செவ்வந்திப் பூ

**அரசியல்** ஹெயிட்டியின் பழைய நாடாளுமன்றம்

ஜனாதிபதி மிச்செல் மார்ட்டெலி

பூமியதிர்ச்சியால் அழிவுற்ற நாடாளுமன்றக் கட்டடம் மீண்டும் கட்டப்பட்டது.

**இனங்கள்**
95% கறுப்பின மக்கள்
05% முலட்டோ மற்றும் வெள்ளையர்

**மொழி** பிரெஞ்சு (உத்தியோகபூர்வ) கிரியோல் (உத்தியோகபூர்வ)

**சமயம்** உரோமன் கத்தோலிக்கம் - 54.7%, புரட்டஸ்தாந்து - 28.8%, வுடு - 2.1%, ஏனையவை - 4.6%, சமயம் சாராதவர் - 10.2%

**இயற்கை வளம்** பொஸ்பைட், செம்பு, கல்சியம் காபனேட், தங்கம்

வருடாந்த காளை மாடு மோதலுக்கு புகழ்பெற்ற நாடு.




மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர் 27,560 km²

மொத்த சனத்தொகை 10,110,019

சங்கீதம் உள்ளிட்ட பல்வேறு கலைப் படைப்புகள் உள்ளன.

தங்கம், செம்புச் சுரங்கம் சிறியளவில் காணலாம்.

பூமியதிர்ச்சி அடிக்கடி ஏற்படும்.

**தலைநகரமும் பெரிய நகரமும்**

காய்கறிகள், பழவகைகள், தானியங்கள் பயிரிடப்படுகின்றன.

இங்கு சுகாதார வசதிகள் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளமையால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படை இங்குள்ளது.

பாரம்பரிய நடனம்.

கோப்பிப் பயிர்ச் செய்கை

மீன் வளம் அதிகம்.

கத்தோலிக்க தேவாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியவைகளை உருவாக்கிய மாபெரும் தத்துவ ஞானி

# ஆர்க்கிமிடீஸ்



கிரேக்கத்தில் வாழ்ந்த திறமைவாய்ந்த கணித நிபுணரான ஆர்க்கிமிடீஸ் புதிய படைப்புகளின் கர்த்தாவாகவும், பௌதிக விஞ்ஞானியாகவும், பொறியியலாளராகவும் வானவியலாளராகவும் புகழ்பெற்று விளங்கினார். ஆனால், அவரின் குழந்தைப் பருவம் குறித்தோ, இளமைக் காலம் குறித்தோ வரலாற்றில் பெரிதும் தகவல்கள் இல்லை. எனினும், ஆர்க்கிமிடீஸால் உருவாக்கப்பட்ட பல படைப்புகள் உலக வரலாற்றில் புகழ்பெற்றவையாகும். குறிப்பாக, ரோமானிய ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து தமது நாட்டைப் பாதுகாப்பதற்காக இவரால் உருவாக்கப்பட்ட சாதனங்கள் அக்காலகட்டத்தில் பயன்மிக்கதாக இருந்தன.



## தோற்றம்

கி.மு. 287இல் கிரேக்கத்தின் சிசிலிக்குரிய சைரக்யூஸ் துறைமுகத்திற்கருகில் உள்ள நகரில் பிறந்தார். இவரின் தந்தையார் வானவியலாளரான ஃபிடியேஸ் என்பவராவார்.

## கல்வி



இவர் கி.மு. 269 இல் கல்வி கற்பதற்காக எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியா நகரில் வசித்தார். கிரேக்க கணித மேதையான எயூக்லீட் அவர்களால் தாபிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் கல்வி கற்றார்.

## புதிய கண்டுபிடிப்பு

p1π எனும் விதியை முன்வைத்தமை ஜோமெட்ரிக் எனும் கணிதப் பிரிவின்

π

விதியாகிய பை p1 π என்பதை முதன்முதலில் உலகிற்கு வெளிப்படுத்தியவர் இவரே. வட்டத்தின் கன அளவு, உருளையின் கொள்ளளவு 'பை' யின் மதிப்பு 3.14 அதாவது கணிதத்தின் ஜீவநாடியான 'பை' எனும் அலகின் மதிப்பினையும் கண்டறிந்து கூறினார்.

## ஆர்க்கிமிடீஸ் திருகு



கி.மு. 265 இல் ஆர்க்கிமிடீஸ் திருகுவை அறிமுகப்படுத்தினார். தாழ்வான மட்டத்தில் இருக்கும் நீரை அதனைவிட உயரமான ஒரு பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு இது பயன்பட்டது.

ஆர்க்கிமிடீஸ் எகிப்தில் கல்வி கற்ற காலத்தில் இந்த திருகு படைப்பை மேற்கொண்டதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.






ஒரு கோளத்தின் பரப்பளவு, சுற்றளவு ஆகியன கோளத்தை ஒட்டி உருவாக்க வல்ல. அத்தோடு உருளையின் பரப்பளவு, சுற்றளவு இவ்விரண்டுக்கான தொடர்பினை முதன்முதலில் அறிவித்தவர் ஆர்க்கிமிடீஸ் ஆவார்.

ஆர்க்கிமிடீஸுக்காக கிரேக்கத்தில் எழுப்பப்பட்ட வெங்கலச் சிலை

## ஆர்க்கிமிடீஸ் விதி

"திரவம் ஒன்றினுள் ஒரு பொருள் மூழ்கும்போது, அதன் அளவுக்கு சமனான அளவு விசை திரவத்தின் அடிப்பகுதியிலிருந்து இயங்கி அப்பொருளை மிதக்க வைக்கும்" என்பதனை ஒருநாள் குளிப்பதற்காக நீர்த் தொட்டிக்குள் இறங்கும்பொழுது கண்டுபிடித்தார். தனது உடலின் நிறைக்கு சமனான நீர் வெளியேறுவதையும் கண்டறிந்தார். உடனே 'யுரேக்கா' என கூவிக்கொண்டு அரண்மனையை நோக்கி ஓடினார்.





பிற்காலத்தில் ஆர்க்கிமிடீஸின் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது.

"எனது கணித வடிவங்களைச் சிதைத்து விடாதே" என கணித முரண்பாடுகளைத் தீர்த்துக் கொண்டிருக்கும்போது தன்னை கொல்ல வந்த ரோமானிய இராணுவ வீரனிடம் ஆர்க்கிமிடீஸ் கூறினார்.





## மறைவு

இவர் கி.மு. 212 இல் நிகழ்ந்த இரண்டாம் 'கார்தேஜ்' யுத்தத்தின் போது, கொல்லப்பட்டார்.

## ஆக்கிமிடீஸின் வெப்பக் கதிர்

சைரகுஸ் நாட்டை ஆக்கிரமிப்பதற்காக வந்த ரோமானிய கப்பலை அழிப்பதற்காக சூரியக் கதிரை ஆக்கிமிடீஸ் பயன்படுத்தினார். இதன்போது, அவர் தயாரித்த 'Burning Mirror' எனும் மாபெரும் நிலைக்கண்ணாடியில் சூரிய ஒளி படும்படி செய்து அதன் பிரதி பிம்பத்தை எதிரிகளின் கப்பலுக்கு பாய்ச்சி அக்கப்பலை தீப்பற்றி எரியச் செய்தார்.



"கணிதத்தின் இரகசியங்களை தான் வெளிப்படுத்துவதன் நோக்கம், அதன் உண்மையான அழகு குறித்து அதனை அன்போடு நெருங்குபவர்களுக்கு மாத்திரமே" என ஆக்கிமிடீஸ் கூறியுள்ளார்.

## இராணுவத்திற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய அறிமுகம்



கி.மு. 215 இல் சைரக்யூஸ் நகரத்தில் ஏற்பட்ட சிவில் யுத்தத்தின்போது, இராணுவ உபகரணங்கள் பலவற்றை ஆர்க்கிமிடீஸ் அறிமுகப்படுத்தினார்.

சைரக்யூஸ் துறைமுகத்தை கைப்பற்ற உரோமானிய ஆக்கிரமிப்பாளர்கள் கப்பல்மூலம் படையெடுத்து வந்தனர். இதன்போது, இவர் உருவாக்கிய பாரிய 'கப்பி' மூலம் அந்த கப்பல்களை தூக்கி கடலில் மூழ்கடித்தமை வரலாற்றில் குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைகளுக்கு மவுசு அதிகம்..!



உலகில் செல்லப் பிராணிகளை வளர்ப்போரிடையே மிகவும் பிரபலமான விலங்கு பூனை ஆகும். பண்டைய காலம்தொட்டே மனிதர்கள் பூனைகளை வளர்த்து வருகின்றனர். பண்டைய கிரேக்கர்கள் பூனையை புனித விலங்காகக் கருதி வந்தனர். அக்காலத்தில் வீடொன்று தீப்பிடித்தால்கூட, முதலில் அங்குள்ள பூனைகளைக் காப்பாற்றிவிட்டுத்தான் வீட்டிலுள்ளவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அளவுக்கு அவர்களிடையே நம்பிக்கை நிலவியுள்ளது. அவ்வாறே, பண்டைய எகிப்திலும் பூனைகள் வழிபாட்டுக்குரிய விலங்கினமாக



இருந்துள்ளன. அரச வம்சத்துக்குச் சொந்தமான பூனைகள் இறந்தால், அவற்றுக்கும் பிரமிட்கள் கட்டும் வழக்கம் பண்டைய எகிப்தில் இருந்துள்ளது.



## ஞானிகளின் பழம்

*Musa sapientum* என்ற அறிவியல் பெயரின் அர்த்தம் 'ஞானிகளின் பழம்' அல்லது 'அறிவாளிகளின் பழம்' என்பதாகும். இந்த அறிவியல் பெயருக்குரிய பழம் எதுவென்று தெரியுமா? அதுதான் வாழைப்பழம். வாழைப்பழங்களில் ஒரு வகைதான் இந்த அறிவியல் பெயரால் அழைக்கப்படுகின்றபோதும், பொதுவாக, எல்லா வாழைப்பழங்களுக்கும் அர்த்தப்படும் வகையில் இது உள்ளது. முற்காலத்தில் முனிவர்களும் ஞானிகளும் விரும்பி உண்ட முக்கனிகளில் ஒன்றாக வாழைப்பழம் கருதப்படுகின்றது. அதனால்தான் இந்த பெயர் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.




## நறுமணம் மிக்க 'குங்குமப்பூ'





குங்குமப்பூ என்பது, *saffron crocus* என்ற ஒருவகை செடியின் பூவிலிருந்து பெறப்படும் நறுமணப் பொருளாகும். இது ஆங்கிலத்தில் *saffron* எனப்படுகின்றது. உலகின் மிக விலையுயர்ந்த நறுமணம் மிக்க பொருளாக குங்குமப்பூ கருதப்படுகின்றது. ஊதா நிறமான பூவிலிருந்து பிரித்தெடுக்கப்படும் குங்குமப்பூவானது, உணவுக்கு சுவையூட்டியாகவும் துணிகளுக்கு நிறமூட்டவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியா,ஸ்பெய்ன், ஈரான் போன்ற நாடுகளில் வணிக ரீதியில் இத்தாவரம் அதிகம் பயிரிடப்பட்டாலும், இதன் தாயகம் தென் மேற்கு ஆசிய நாடுகளாகும்.

## இவ்வார கார்ட்டூன் படம்








இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, மே 18 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 18, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org